வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# கவிஞர் சுகிர்தராணியின் கவிதைகளில் விளிம்புநிலைப்பதிவுகள்

**முனைவர் இரா. முரளி கிருட்டினன்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-2

மின்னஞ்சல் முகவரி – smrmurali@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் காலத்தின் கண்ணாடி. சமுதாயத்தின் பிரதிபலிப்பு. இலக்கிய மரபில் பன்னெடுங் காலந்தொட்டே பாடுபொருளும் மாறி வந்துள்ளன. எல்லோருக்கும் பிடித்த வடிவமாக, இலக்கியத்தின் பிள்ளையாக விளங்குவது கவிதை. எதை வேண்டுமானாலும் பாடுபொருளாகக் கொண்டுப் பாடுவதுதான் கவிதைக்குக் கிடைத்த சுதந்திரம். மக்கள் கவிஞர் சுகிர்தராணி தம் கவிதைகளில் சமுதாயத்தின் விளிம்புநிலையினரான பெண்களின் பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகள் குறித்தும் திடகாத்திரமாக எழுதி வருகிறார். அவருடைய கவிதைகளில் காணப்படுகின்ற விளிம்புநிலையினர் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கலைச்சொற்கள்**

விளிம்புநிலை – வருணசிரமம் - பட்சி – சேரி – பசலை – மிருகம் - மலட்டு நிலம்

**முன்னுரை**

“கவிதைகள் கண்ணிவெடி போன்றன“ என்பார் எழுத்தாளர் பொன்னீலன்.

கவிதைகள் சமகாலத்தின் பதிவுகளாக இருக்க வேண்டும். அதுவே உயிர்ப்புள்ளதாக இருக்கும். வெறும் வடிவ வேறுபாட்டால் ஹைகூ, சென்ரியு, லிமரிக், லிமரைக்கூ, கஸல், ஹைபுன் என்னும் பெயர்கள் தாங்கிய நவீனக்கவிதைகளின் வரவுகளுக்கிடையே- ஒடுக்கப்பட்ட மாந்தர்களை அடையாளப்படுத்துகின்ற விளிம்புநிலை எழுத்துக்கள் அத்தகைய வரலாற்றுப் பின்னணியிலே தடம்பதித்தன. இதனால்தான் அதிகார மையங்களை விட்டுத் துரத்தியடிக்கப் பெற்ற விளிம்புநிலை மாந்தர்களின் இருப்புநிலையைக் கண்டறிவதும், நிகழ்கால எழுத்துக்களில்

அவர்களின் தன்னிலையை உறுதி செய்வதும் தவிர்க்க முடியாதனவாகின்றன. சுகிர்தராணியின் கவிதைகள் அரசியல் நிலை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, காதல், நாடக காதல், மதமெனும் இழிவு, சாதியச் சாக்கடையைத் தோலுரித்தல், அடிப்படை விளிம்புநிலை மக்களின் வலிகள், கோட்பாட்டுத் தத்துவங்கள், பெண்ணியச் சிந்தனைகள், காதலின் மென்மை, காமத்தின் வன்மை, பகை முடிக்கும் சீற்றம், போராளியின் முழக்கம் என பரந்துபட்ட விடுதலை ஒளிக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளன. இத்தகைய போக்கினைத் கவிஞர் சுகிர்தராணியின் கவிதைகளில் கண்டறிய முயல்வது இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

**விளிம்புநிலை – விளக்கம்**

விளிம்புநிலை என்னும் பொருள்படும் *‘சபால்டன் என்னும் சொற்றொடர் முதன்முதலில் இத்தாலிய மார்க்சியலாளர் ஆன்டோனியோ கிராம்ஸ் கியால் அறிமுகம் செய்யப் பெற்றது’’*[1] மாற்று வரலாற்று எழுதியலாக, அரசியல் வாசிப்பின் பொருட்டுக் கட்டமைக்கப்பட்ட அரசியல் புனைவே விளிம்புநிலையாகும். “அடையாளங்கள் அழிக்கப்பட்டிருந்த விளிம்புநிலை மக்களுக்கு எழுத்துக்களில் தன்னிலை இடத்தை அளித்தலே இதன் நோக்கமாகும்”[2] அரசு, நாடு, மன்னர், சட்டம் ஆகியவற்றைப் புறக்கணித்தலும், அடித்தட்டு மக்களை நோக்குதலுமே இதன் செயல்பாடுகளாகும்.

**விளிம்பு நிலைக்கவிதைகள்**

பால், சாதி, நிறம், நிறுவனம் போன்ற கூறுகளால் புவியியல், அரசியல், கருத்தியல், கலாச்சாரம் போன்ற தளங்களில் கீழ்நிலைப்படுத்தப்பட்ட சக்திகள் விளிம்புகள் என்றும் அதிகாரங்கள் குவிந்துள்ள சக்திகள் மையங்கள் என்றும் கருதப்படுகின்றன. விளிம்புநிலை அரசியல் என்பது ஆதிக்கம் x அடங்கிப்போதல் என்கிற உறவுநிலையில் வைத்து ஆராயத்தக்கதாகும் வெள்ளையர் ஆதிக்கத்தால் விளிம்பிற்குத் துரத்தப்பட்ட கறுப்பினத்தவர்கள் மட்டுமன்றி உடற்கூறை அடித்தளமாகக் கொண்டு ஒடுக்கப்படுதலால் பெண்களும், பிறப்பிடத்தின் அடிப்படையில் புலம்பெயர்ந்தோரும், இந்தியச் சாதியச்சமூகத்தில் தலித்துகளும் விளிம்புநிலையினராகவே கருதப்படுகின்றனர். இவர்களைத் தவிர சகமனிதர் என்ற நிலையில் கூட மதிக்கப்படாத விபச்சாரிகள், திருநங்கையர், தொழுநோயாளிகள், எய்ட்ஸ் நோயாளிகள் போன்றோரும் விளிம்புநிலை மாந்தர்களேயாவர். ஆணாதிக்கச் சமூகச்சூழலில் பல்வேறு நிலைகளில் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருகிற பெண்கள்

அதற்கு எதிராகப் படைக்கின்ற கவிதைகள் பெண்ணியக்கவிதைகளாக அறியப்படுகின்றன.

**பெண்ணியக்கவிதைகள்**

தொடக்கக் காலத்தில் பெண்கள் ஆணுக்குச் சமமாக நின்று வாழ்வியல் நெறிகளை மேற்கொண்டு வந்தாள். இடைப்பட்ட காலத்தில் இழிநிலைகளை மேற்கொண்டு தாழ்த்தப்பட்டனர். வன்புணர்ச்சி, பாலியல் கொடுமைகளுக்குப் பெண்கள் உள்ளாக்கப்பட்டனர். பலவிதமான தாக்குதலுக்கு ஆளாகினர். பெண்மைக்குரிய சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் பறிக்கத் தொடங்கிய பிறகு குடும்பங்களிலிருந்த மகிழ்ச்சி பறிபோய் விட்டது. எப்போது ஒரு குடும்பத்தில் சமஅளவு சுதந்திரத்தோடு, இரண்டு உயிர்கள் இணைந்து வாழுகின்றனவோ, அங்கேதான் அன்பும், அமைதியும், ஆனந்தமும் இருக்கும். ஒருவர் சுதந்திரமாகவும், இன்னொருவர் அடிமையாகவும் இருக்கிறபோது குடும்பத்தில் பதட்டமும், பரபரப்பும், அவநம்பிக்கையும் நிலவுகிறது. பெண்மையின் ஆற்றலை எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிடாத ஆண்கள்தான் இல்லற வாழ்க்கையிலும், தன்னைத்தானே உணர்ந்து கொள்கிற தேடலிலும் வெற்றி பெற இயலும். ஆனால், ஆணாதிக்கத்தின் சிந்தனை வேறாக இருக்கிறது. இன்றைய சூழலில் சமுதாயத்தில் விளிம்புநிலையினராக கருதக் கூடிய தலித்பெண்களின் நிலை சமநிலையற்ற தன்மையில் இருக்கின்றது. ஆண்கள் தங்கள் இச்சைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருளாகத் தான் அவர்கள் கருதப்படுகிறார்கள். இதனால் ஆவேசமுற்ற கவிஞர் சுகிர்தராணி,

**“அவ்விடத்தில்**

**தீயின் முதற்புகையைப் போல**

**ஆடிக்களித்து நம் தேடல்**

**அன்று பரிசுத்தமாயிருந்தது**

**காலத்தின் விசிறி சுழலச் சுழல**

**இன்று காணக் கிடைக்கின்றன**

**வெளியெங்கும் என் உடல்கள்**

**உள்ளாடைகள் கிழிக்கப்பட்டும்**

**கைவிடப்பட்ட கிணற்றில் மிதந்தும்**

**ஒருமுழக் கயிற்றில் அசைந்தாடியும்**

**திராவக வீச்சில் கருகியும்**

**தொடையிடுக்கில் இரும்புக்கம்பி செருகப்பட்டும்**

**நாள்தோறும் கூட்டுகிறாய் வாதையை**

**மூச்சு முட்டுகிறது ஆதாம்**

**இருபுறமும் கூராக்கப்பட்ட வாளைப்**

**பரிசாகத் தருகிறேன்**

**வெட்டி எறிந்துவிடு உன் விரைகளை"**[3]

ஆதலின் ஆணாதிக்கத்தில் குறியீடாகக் காணப்படும் ஆண்களின் விதைப்பைகளை வெட்டி வீச வேண்டும் என்னும் கோபம் இக்கவிதையில் வெளிப்படக் காணலாம். இவ்வாறான கவிதைப் போக்கு தீவிரவாதப் பெண்ணியத்தின் ஓர் அங்கமாகவே கருதலாம்.

விடுதலை என்பது வேட்கை. அவ்வாறான விடுதலையைப் பெண்கள்,

**"கைநாட்டுகளைத் தடமழித்து**

**ஏடெடுக்கவும் எழுந்துநின்றோம்**

**ஒடுக்கப்பட்ட தோற்பறையிலிருந்து**

**விடுதலையின் மாஇசையை**

**மீட்டெடுக்கவும் பழகிக்கொண்டோம்"**[4]

என்று விடுதலை இசைப்பாடுகிறார் கவிஞர் சுகிர்தராணி. விடுதலை அது இயங்கிக் கொண்டே இருப்பது.

மதங்களின் கூடாரத்தில், வருணாசிரம தத்துவத்தில் கட்டமைக்கப்பட்டதுதான் சாதி. அது இன்றும் நின்று நிலைத்து மனித உயிர்களைப் பலி கேட்கிறது. நூற்றாண்டுகளாகத் தொடர்ந்தபடி இருக்கும் இழிவை 'நூற்றாண்டுகளின் ஒற்றை கேள்வி' என்னும் தலைப்பிலமைந்த கவிதையில்,

**"தலை சாய்த்து நீரருந்தும்**

**சிறு பட்சியைப்போல**

**_______ ________ ________**

**சேரி ஊராகாதா அம்மா ?"** [5]

என்ற கேள்வியின் வலி சமுதாயத்தின் அவமானம் ஆகும்.

'சாதி என்பது இன்னும் கிராமங்களில் தான் கட்டமைக்கப்படுகிறது' என்றார் பெரியார். சமூகத்தில் நிலவுகின்ற இரட்டை கிராமம், (ஊர், சேரி), இரட்டைச் சுடுகாடு, இரட்டைக் குவளை என்று விளிம்புநிலை மக்களைப் புறக்கணிக்கிற ஒதுக்குகிற சமூக அவலத்தை 'வீடு திரும்புதல்' என்னும் கவிதை மூலம் கவிஞர் பதிவு செய்கிறார்.

**"பித்தேறி திரிந்து கொண்டிருக்கிறோம்**

**_____ ______ ______ ______ _______**

**மேடையை விட்டு**

**நாமிருவரும் கீழிறங்குகிறோம்**

**வரிசைதப்பி மக்கள் கலைகிறார்கள்**

**நீ ஊருக்குள் போகிறாய்**

**நான் சேரிக்குச் செல்கிறேன்."[6]**

என்று முடிக்கும்போது வலிபொருக்காது நெஞ்சின் குமுரலோடு, வேற்றுமைக்கான சுவர் எதுவென அடையாளப்படுத்துவதன் மூலம் மானுடத்தைத் தலை கவிழச் செய்கிறார் கவிஞர்.

எந்திரமயமான வாழ்வியல் சூழலில் சூறாவளிக் காற்றில் பறக்கும் தூசு திசைகளற்று விழுவதென புரட்டிப்போட்டு விடுகிற இவ்வாழ்க்கை, பொருளாதார நெருக்கடிகள் தரும் வலிகளை, வயிற்றுப் பிழைப்புக்காக அசையும் அசைவுகளை, வாழும் வாழ்க்கையை 'பல் பிடுங்கப்பட்ட வாழ்க்கை' என்ற கவிதையில் சமநிலைத் தவறி ஆடும் விளிம்புநிலையினர் வாழ்க்கையின் தீராத துக்கத்தைப் பதிவு செய்கிறார்.

**"ஒவ்வொரு அடியாக நடக்க நடக்க**

**சமநிலைத் தவறி ஆடுகிறது வாழ்க்கை**

**ஏந்தியிருக்கும் கழியின் இருபுறமும்**

**தீராத துக்கமும்**

**ஒருபோதும் காணப்படாத கனவுகளும்**

**தொங்கிக் கொண்டிருக்கின்றன.”** [7]

என்று பிழைப்புக்காக கயிற்றின் மேல் நடக்கும் பெண்ணொருத்தியின் வாழ்வு தரும் வலியை வடுக்களாகக் காட்டுகிறார்.

காலம் காலமாய் உயிர் தின்று ஏப்பம் விடும் சாதிகள், கொடும் வல்லூறுகள் பறந்த வண்ணம் இருக்கின்றன. அவைகள் விளிம்புநிலை மக்களில் பெண்களிடம் தன் கோபத்தைச் செலுத்துகின்றன. சாதிய ஆதிக்கவெறிகளின் குறிகள், அப்பப்பா வலிகளின் உச்சத்தில் பீறிட்டெழும் யோனியின் குருதியை குடித்து கொப்பளித்து கும்மாளமடிக்கின்றன. துயர் நிரம்பிய இவ்வாழ்வை பொறுக்காது முடிவுகட்ட ஒட்டுமொத்த தலித் பெண்களின் மனக்குமுறல்களை போர்க்குரலெடுத்து ஓங்கி உரைக்கிறார், ‘கொலையும் செய்வாள் பறச்சி’ என்னும் கவிதையில்,

**“எங்கள் ஆடைகளை அவிழ்ப்பீர்**

**அம்மணமாக்குவீர்**

**வன்புணர்வீர்**

**தமையனோடு புணரச் செய்வீர்**

------- ------ ------ ---- ---- ---

**இனி எவையும் மிச்சமில்லை**

**நீங்கள் செய்வதற்கு**

**ஆனால்**

**நான் செய்ய ஒன்றுண்டு**

**அது**

**கொலையும் செய்வாள் பறச்சி”** [8]

இழிநிலையாக அரங்கேறிகொண்டிருக்கும் ஆணவக் கொலைவரை செய்து விட்டீர்கள் என்று கூக்குரலிட்டு, ‘எனக்கான ஆயுதத்தை என் எதிரியே தீர்மானிக்கிறான்’ மாவோவின் வரிகளை நினைவுபடுத்துகிறார் கவிஞர் சுகிர்தராணி.

உயர்சாதி இந்துக்களாகத் தன்னைக் கருதும் சமூகத்தில் பிறந்த பெண்களின் மனதில் மரித்துப் போகும் காதலை, ‘பலியிடப்பட்ட காதல்’ என்னும் கவிதையின் வரிகள் உணர்த்துகின்றன.

**“சாணைப் பிடிக்கப்பட்ட சாதியின் கூர்வாளால்**

**வெட்டப்படாத உனதுயிர் வேண்டியே**

**கைவிடுகிறேன் நம்முடைய காதலை”[9]**

‘கொலை பார்க்கும் நிலம்’ தலைப்பிலமைந்த கவிதையில் மதம் கட்டமைத்த சாதியம் அழிந்து போகக் கடவதாக, இல்லையெனில் நிலம் மலடாகட்டும் எனக் கொடூரத்தின் வேர்களைச் சாடுகிறார்.

**“எனக்கு நானே சாபமிட்டுக் கொள்கிறேன்**

**சாதியின் புல் பூண்டு மரம் மயிரென**

**எவையும் முளைக்காத**

**மலட்டு நிலமாகட்டும் நான்”[10] (இப்படிக்கு ஏவாள்)**

தனிமையின் விரக்தியும், காமத்தின் வெம்மையும் உடலையும் மனதையும் வாட்டுகின்றன. உடல் என்பது ஒரு வணிகப் பொருளாகிப் போன உலகமயச் சூழலில், இச்சையின் அர்த்தத்தை மீட்டு அதன் வழி பெண்ணின் விடுதலையைப் பேசுகிறார் ‘இரவு மிருகம்’ எனும் தலைப்பில் அமைந்த கவிதையில்,

**“ பருவப் பெண்ணின் பசலையைப் போல**

- - - - - - - - - - - - - - - - - - - - -

**"கூசும் வார்த்தைப் பிரயோகங்களை**

**சன்னமாய் சொல்லியவாறு**

**சுயபுணர்ச்சியில் ஆழ்ந்திருந்த வேளை**

**பறவைகளின் சிறகோசை கேட்டதும்**

**என்னை என்னிடத்தில் போட்டுவிட்டு**

**ஓடிவிட்டது இரவுமிருகம் "** [11] **(இரவுமிருகம். ப.19)**

மெழுகுவர்த்தியின் ஒளியும் தனிமையுமான வாழ்வில் இச்சை உடலைப் பருகுவதைப் பதிவு செய்கிறார். "பெண்ணின் உடல் சதையால் ஆனது என்று பார்ப்பது ஆணியம். பெண்ணின் உடல் ஆக்கபூர்வமானது. உற்பத்தி சக்தி வாய்ந்தது எனச் சொல்வது பெண்ணியம். எல்லாக் காலவெளியிலும் பெண்ணின் உடல் அந்திப்பொழுதாய் அடைக்கப்படுகிறது."[12] என்னும் கருத்து பெண்ணியத்தின் போக்கை அடையாளம் காட்டுவதாகவும் கவிதையின் கருத்துக்கு வலுசேர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

சமூகத்தில் ஆணாதிக்க மிருகங்கள் காமத்தின் வால் பிடித்து பித்தேறி திரிந்தும், அது பெண்ணின் மனவலி எதையும் பாராமல் தேகத்தை கிழித்து போட்டு, எச்சிலும், காமநீரையும் சிந்திவிட்டு புணர்வு நிமித்தமாக மதர்த்து திரிவதை 'கலவி வாசனை' என்னும் கவிதை மூலம் சமூக மனங்களைக் சாடுகிறார்.

**" கிழிந்த தேகத்தை**

**நேர்படுத்திகொண்டு நிமிர்கிறேன்.**

**மறுபடியுமென்**

**உறுப்புக்கிளைகள் ஒடிந்துவிழும் படியாக**

**வந்தமர்கிறது ஓர் உருவபூதம்.**

**- - - - - - - - - - - - - - - - - - - -**

**முடிவின் பிந்தைய கணத்தில்**

**இரத்தம் தோய்ந்த ஆடையைத்**

**துவைத்துப் போடுகிறாள்**

**பிரபஞ்சமெங்கும் கலவிவாசனை.”** [13] **(இரவுமிருகம், ப.30)**

இவ்வுலகில் பிறந்த அத்தனை உயிர்களும் வாழப் பிறந்தவை. உரிமைகளுடன் வாழ்தல் மிகவும் அவசியம். வாழ்க்கை கொஞ்சம் காலம்தான். அந்த வாழ்க்கையில் விளிம்புநிலையினரான பெண்கள் விடுதலை பெற்றவர்களாக, சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் கவிஞர் சுகிர்தராணியின் கவிதைகளில் வெளிப்படுவதைக் காணலாம்.

## தொகுப்புரை

‘பிறப்பொக்கும் எல்லா உயர்க்கும்’ என்ற கூற்றின் படி பிறப்பால் அனைவரும் சமம் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் பதிந்து வேற்றுமையற்ற சமத்துவச் சமுதாயம் என்ற ஒற்றைத் தத்துவத்தை நோக்கி பயணிக்கின்றன கவிஞரின் கவிதைகள். தமிழிலக்கியப்பரப்பில் விளிம்புநிலை மாந்தர்களால் படைக்கப்படுகின்ற கவிதைகளுள் பெண்ணியக்கவிதைகள், தலித்தியக் கவிதைகள், புகலிடக்கவிதைகள் ஆகியன குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. விலைமகளிர், திருநங்கையர், தொழுநோயாளிகள், எய்ட்ஸ் நோயாளிகள் குறித்த கவிதைப்பதிவுகளில் இவர்களைக் குறித்த பரிதாபஉணர்ச்சியை வெளிப்படுத்தும் / இரக்கஉணர்வை வலியுறுத்தும் தன்மையையே அறியமுடிகின்றது. எனினும் இவர்கள் தமிழின் கவிதைப்பரப்பில் பொதுவாக அபத்தமான உவமைகளாக- படிமங்களாகவே பயன்படுத்தப்படுகின்றனர். எனினும் தங்களது வேதனையை தாங்களே வெளிப்படுத்தும் வகையில் -தங்களது தன்னிலை இடத்தைப் பெறும் வகையில் அமைந்த கவிதைத்தொகுதிகள் இவர்களால் படைக்கப்படாதிருத்தல் பின்னடைவே ஆகும்.

## சான்றெண் விளக்கம்


1. www. *wikipaedia*.org. Date – 12.11.2021
2. அ.மார்க்ஸ், பொ. வேல்சாமி (தொ.ஆ.) விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க்கதையாடல்களும், ப.13
3. சுகிர்தராணி, இப்படிக்கு ஏவாள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு,2016. ப.43
4. சுகிர்தராணி, தீண்டப்படாத முத்தம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு,2012, ப.27
5. சுகிர்தராணி, இப்படிக்கு ஏவாள். ப. 20

6. மேலது, ப.65
7. மேலது, ப. 15
8. மேலது, ப.31
9. மேலது, ப.36
10. சுகிர்தராணி, இப்படிக்கு ஏவாள் ப. 46
11. சுகிர்தராணி, இரவுமிருகம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு, 2010, ப.19
12. அரங்க மல்லிகா, தலித் பெண்ணிய அழகியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, முதற்பதிப்பு -2008, ப.13.
13. சுகிர்தராணி, இரவுமிருகம், ப.30

## துணை நின்ற நூல்கள்

1. அரங்க மல்லிகா, தலித் பெண்ணிய அழகியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, முதற்பதிப்பு -2008,
2. சுகிர்தராணி, இப்படிக்கு ஏவாள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு, 2016
3. சுகிர்தராணி, இரவுமிருகம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு, 2010,
4. சுகிர்தராணி, தீண்டப்படாத முத்தம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு,2012,
5. மார்க்ஸ் அ., பொ.வேல்சாமி (தொ.ஆ.) விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், புலம் புத்தக வெளியீட்டாளர், சென்னை.